இலங்கை வங்கியினால் முழுமையாக உரிமம் கொள்ளப்பட்ட துணை நிறுவனமான பி ஓ சி முகாமைத்துவ மற்றும் துணைச்சேவைகள் (வரையறுக்கப்பட்ட) நிறுவனமான, தொழில்நுட்பப் பிரிவில் காணப்படும் கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தகுதிவாய்ந்த, அனுபவமிக்க, துடிப்பான மற்றும் விளைவுகள் சார்ந்த மனப்பான்மையுடைய இளம் நபர்களை எதிர்பார்க்கின்றது

தொடர்பாடல்/ வலையமைப்புப் பொறியியலாளர்
(ஒப்பந்த அடிப்படை)

1. கல்வி/ தொழில்சார் தகைமைகள்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/ பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட கணிணி வலையமைப்பு/ இணையப் பாதுகாப்பு/ வலையமைப்பு பொறியியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டம்

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/ பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்பத்துறையில் இளங்கலை மானி பட்டம் அல்லது தொடர்புடைய துறைகளில் பெறப்பட்ட கணிணி வலையமைப்பு/ இணையப் பாதுகாப்பு/ வலையமைப்பு பொறியியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டம்

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/ பல்கலைக்கழகத்தில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய துறையில் பெறப்பட்ட ஏதேனும் குறைந்தபட்ச ஒரு தகைமை

CCNA/ NSE 4/ CCSA

2. ஏனைய பண்புகள்

- சுய உந்துதல் மிக்க, விளைவுசார்ந்த மனப்பான்மை உடையவராக இருத்தல்
- பிரச்சினைகளைத் தீர்க்கும் சிறப்பான திறன்களைக் கொண்ட ஆளுமை மிக்கவராக இருத்தல்
- சாதாரண வேலை மணித்தியாலங்களுக்கு மேலதிகமாகவும், வார இறுதி நாட்கள்/ விடுமுறை தினங்களிலும் பணி புரிய இயலுமானவராக இருத்தல்.

3. கடந்தகால வேலை அனுபவம்

- ஆகக்குறைந்தது ஒரு (01) வருடம் தொடர்பாடல் மற்றும் வலையமைப்புத் துறையில் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. வயது எல்லை

- விண்ணப்பப் பூர்த்தி திகதியன்று 35 வருடங்களைப் பூர்த்தி செய்த அல்லது அதற்குக் குறைந்த வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்த காலம்

- மொத்த ஒப்பந்தக் காலப்பகுதி மூன்று (03) வருடங்களாகும். (செயற்திறன் அடிப்படையில் வருடாந்த மறுபரிசீலனைக்கு உட்பட்டது)

6. சம்பள அளவு

- பேசித் தீர்க்கப்படலாம். விண்ணப்பதாரியின் சுயவிபர அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளப் பொதி வழங்கப்படும்.

விண்ணப்ப நடைமுறை

- விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, அனைத்துக் கல்விசார் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளை இணைத்து, காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்பட்ட பதவியைக் குறிப்பிட்டு, கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு **2026/11/25** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கவும்.

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை விண்ணப்பிக்கும் இறுதித் திகதியன்று பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பொருத்தமான துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பிழையான தகவல்களைக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்ப இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன எந்தவித மேலதிக அறிவித்தலும் இன்றி ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

பிரதம நிறைவேற்று அதிகாரி
பி ஓ சி மனேஜ்மன்ட் அன்ட் சப்போட் சேர்விசஸ் பிறைவேற் லிமிடெட்
(வரையறுக்கப்பட்ட நிறுவனம்)
18வது மாடி இலங்கை வங்கி - தலைமை அலுவலகம்,
'BOC சதுக்கம்', இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 476 4891
மின்னஞ்சல்: career@bocits.lk

BOC IT Solutions (Pvt) Ltd
(A fully owned subsidiary of the Bank of Ceylon)

• எந்த வகையிலான விளம்பரம் செய்து ஆதரவு கோருதலும் உடனடி தகுதியின்மையாகக் கருதப்படும். • தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. • தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான உரிமைகளையோ அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ உரிமை உள்ளது.